15

<u>சுருக்கம்</u>

போக்குவரத்து – மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் 03.07.2018 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு – தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக பயிற்சி மையங்களில் ஓட்டுநர்களுக்கு திறம்பட இயக்கி பயிற்சி அளிக்கும் வகையில் சிமுலேட்டர் (Simulator) எனும் உயர் தொழில்நுட்பப் பயிற்சி கருவியை கொள்முதல் செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>போக்குவரத்து (பி1) துறை</u>

**அரசாணை (நிலை) எண்.215** | **நாள்:17.07.2018.**

**விளம்பி வருடம், ஆடி 1,**
**திருவள்ளுவர் ஆண்டு 2049.**

**<u>ஆணை:-</u>**

03.07.2018 அன்று போக்குவரத்துத் துறையின் மானியக் கோரிக்கை எண்.48–ன் மீது சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதத்திற்குப் பின் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

> "பொது மக்களுக்கான போக்குவரத்து சேவைகளில், ஓட்டுநர்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். மாறிவரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, விபத்துக்களை முற்றிலுமாகத் தவிர்த்து, சாலைப் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில், ஓட்டுநர்களுக்கு அவ்வப்போது புத்தாக்கத் திறன் மேம்பாட்டு நுண்ணறிவுப் பயிற்சி அளிப்பது அவசியமான ஒன்றாகும். எனவே, இதனைக் கருத்தில் கொண்டு நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி, சாலைகளையும், போக்குவரத்து நெரிசல்களையும் ஓட்டுநர்கள் கணிணித் திரை வாயிலாக உடன் கண்டறிந்து, அதற்கேற்ப பேருந்துகளை திறம்பட இயக்கிடப் பயிற்சி அளிக்கக்கூடிய 'சிமுலேட்டர்' (Simulator) என்னும் உயர் தொழில்நுட்ப பயிற்சிக் கருவியானது அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பயிற்சி மையங்களிலும் விரைவில் நிறுவப்படும். மேலும், ஓட்டுநர்கள் களநிலவரங்களை உடனுக்குடன் கண்டறிந்து அதற்கேற்ப, திறம்பட செயல்படும் ஒரு நடைமுறை அனுபவத்தினை இப்பயிற்சியானது அளிக்கும்".

2. மேற்குறிப்பிட்ட சிமுலேட்டர் என்னும் உயர் தொழில்நுட்ப பயிற்சியினை ஓட்டுநர்களுக்கு அளிப்பதன் மூலம் அவர்களின் திறன் மேம்பாடு அடைவதுடன், சாலை விபத்துக்களும் முற்றிலும் தவிர்க்க வழிவகை ஏற்படும். மேலும், சாலைப் போக்குவரத்து நிறுவனத்திற்கு ஏற்கனவே சாலைப் பாதுகாப்பு நிதியின் (Road Safety Fund) கீழ் புதிதாக சிமுலேட்டர்கள் (Simulators) கொள்முதல் செய்யும் பொருட்டு ரூ.56,00,000/– (ரூபாய் ஐம்பத்தாறு இலட்சம் மட்டும்) அரசால் வழங்கப்பட்டுள்ளது.

3. எனவே, இத்திட்டத்தில், சாலைப் போக்குவரத்து நிறுவனம் ஒரு முகமையாக (Nodal Agency) இருந்து 1998–ம் வருடத்திய தமிழ்நாடு ஒப்பந்த சட்டம் மற்றும் ஒப்பந்த சட்ட

...2

விதிகளுக்கு உட்பட்டு (Tamil Nadu Transparency in Tenders Act, 1998 and Rules) மேற்குறிப்பிட்ட 'சிமுலேட்டர்' (Simulator) என்னும் உயர் தொழில்நுட்ப பயிற்சிக் கருவிகளை கொள்முதல் செய்து அரசு போக்குவரத்துக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் அனைத்து பயிற்சி மையங்களுக்கும் வழங்க வேண்டுமென அரசு இதன் வழி ஆணையிடுகிறது. மேலும் இதற்கான கொள்முதல் செலவினமானது இத்திட்டத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ள தொகைக்குட்பட்டு இருக்கவேண்டுமெனவும் சாலைப் போக்குவரத்து நிறுவன இயக்குநருக்கு இதன்மூலம் அறிவுறுத்துகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பி.டபிள்யு.சி. டேவிதார்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர்,
சாலைப் போக்குவரத்து நிறுவனம், சென்னை-113.
மேலாண் இயக்குநர்கள்,
அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட்,
சென்னை-2.
மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை-2.
தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்,
விழுப்புரம் / சேலம் / கோயம்புத்தூர் / திருநெல்வேலி/ மதுரை /கும்பகோணம்.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
போக்குவரத்துத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
தனி அலுவலர், தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

Ojukami

பிரிவு அலுவலர்.